## 9-ஆம் ஆண்டில் கழகத் தலைவராக – தவிர்க்க முடியாத புதிய அரசியல் பாதையை உருவாக்கி

# தமிழ்நாட்டின் பெருமையை இந்தியாவிற்கே பறைசாற்ற வைத்தவர் மு.க.ஸ்டாலின்!

## “தி.மு.கழகத்தை மீண்டும் வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்வேன்” – என கழகத் தலைவர் உறுதி!

**சென்னை, ஆக. 30-**

**தி.மு.கழகத் தலைவராக பொறுப்பேற்று 9வது ஆண்டில் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடியெடுத்து வைத்துள்ளார். 28.8.2018 புதிய விடியல் நாள் - தி.மு.க. தலைவராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நாள்! இந்தியாவில் தவிர்க்க முடியாத புதிய அரசியல் பாதையை உருவாக்கி இருக்கிறார். தமிழ்நாட்டின் பெருமையை இந்தியாவிற்கே பறைசாற்ற வைத்திருக்கிறார் மு.க.ஸ்டாலின் அவர்கள். இந்நாளையொட்டி கழகத் தலைவர் விடுத்துள்ள பதிவில், “தி.மு.கழகத்தை மீண்டும் வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்வேன்” - என உறுதியுடன் குறிப்பிட்டுள்ளார்,**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமை யிலான திராவிட மாடல் அரசு, பல்வேறு சாதனைகளை செய்துள்ளது. முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி நாட்டிற்கே வழிகாட்டியது திராவிட மாடல் அரசு!

தமிழாட்சியாக தமிழர் ஆட்சியாக நடத்திக் காட்டியுள்ளார் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**கொள்கைப் பிடிப்புடன்**
**கழகத்தை வழிநடத்தும் தலைவர்!**

தி.மு.க. தலைவராக மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்று 8 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ள நிலையில், மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், உறுதியான கொள்கைப் பிடிப்புடன், தொண்டர்களைத் தொய்வின்றி வழிநடத்தி வருகிறார் திராவிட மாடல் நாயகர் மு.க. ஸ்டாலின்....

நூற்றாண்டு பாரம்பரியமிக்க திராவிட இயக்கத்தின் ஆணி வேராகத் திகழும் தி.மு.க. எனும் பேரியக்கம், தமிழ்மொழி வளர்ச்சி, தமிழர் நலன், தமிழ்நாட்டின் வளம் ஆகியவற்றை உயிர்மூச்சாக காத்து வருகிறது. அரை நூற்றாண்டு காலம் தி.மு.க.வின் தலைவராக அரும்பெரும் சாதனைகள் படைத்த முத்தமிழறிஞர் கலைஞரின் மறைவைத் தொடர்ந்து, கடந்த 2018 ஆகஸ்ட் 28ஆம் தேதி தி.மு.க.வின் தலைவராக பொறுப்பேற்றார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்...

**தலைவராக மு.க.ஸ்டாலின்**
**உறுதியேற்ற நாள் ஆக.28 !**

ஆம்... 28.8.2018 புதிய விடியல் நாள்! காஞ்சி தந்த வள்ளுவன் பேரறிஞர் அண்ணாவும் திருவாரூர் தந்த திராவிடத் திருமகன் முத்தமி ழறிஞர் கலைஞரும் கட்டிக் காத்த கழகத்தை மூன்றாம் தலைமுறையாக இருந்து தனது தலையால் தாங்க மு.க.ஸ்டாலின் உறுதி எடுத்துக் கொண்ட நாள்!



தி.மு.க. எனும் பேரியக்கத்தின் தலைவராக 8 ஆண்டுகளை நிறைவு செய்து 9வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளார் மு.க.ஸ்டாலின்.. முதலில் அரசியல் வெற்றிகளை, தி.மு.க.வுக்கு பெற்றுக் குவித்தார். கட்சியின் தலைவராக பொறுப்பேற்ற 6 மாதத்திற்குள் 2019 நாடாளுமன்றத் தேர்தலில் - ஒரே ஒரு தொகுதி நீங்கலாக - அனைத்துத் தொகுதியிலும் வெற்றி பெற வைத்தது அவரது உழைப்பின் சாட்சியம். இதனைத்தொடர்ந்து 2021 சட்டமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக அரியணை ஏற வைத்தது மு.க.ஸ்டாலினின் உழைப்புக்கும் திறமைக்கும் கிடைத்த சாட்சியம். முந்தைய அதி.மு.க. ஆட்சியில் நடந்த கிராமப்புற உள்ளாட்சித் தேர்தலாக இருந்தாலும் சரி ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு நடந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலாக இருந்தாலும் சரி அவை அனைத்திலும் பெரும்பான்மை இடங்களை தி.மு.க. கைப்பற்றக் காரணமாக அமைந்தது தலைவர் மு.க.ஸ்டாலினின் திறமையும் ஆற்றலுமே ஆகும்!

**‘இந்தியா’ கூட்டணியை**
**உருவாக்கியதில்**
**பெரும் பங்காற்றியவர்!**

2024 நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, பாசிச பா.ஜ.க.வுக்கு எதிராக தேசிய அளவில் வலுவான “இந்தியா” கூட்டணியை உருவாக்கியதில் முக்கிய பங்கு வகித்தார் தி.மு.க. தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்... 2024 நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்நாடு, புதுச்சேரியில் 40 தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி வெற்றிவாகை சூடியது.. 2019 நாடாளுமன்றத் தேர்தல் - 2021 சட்டமன்றத் தேர்தல் - உள்ளாட்சித் தேர்தல் - 2024 நாடாளுமன்றத் தேர்தல் என அடுத்தடுத்த நான்கு தேர்தல்களிலும் தி.மு.க. வின் வெற்றி என்பது தலைவர் மு.க.ஸ்டாலினின் ஆளுமைக்குக் கிடைத்த சான்றாகும்...

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில், திராவிட மாடல் அரசு கடல்போல் பல சாதனைகளை செய்துள்ளது .. தமிழாட்சியாக தமிழர் ஆட்சியாக நடத்திக் காட்டியவர் தலைவர் மு.க.ஸ்டாலின்.. மக்களின் நலனுக்காக பல்வேறு முத்திரைத் திட்டங்களை அறிமுகப்படுத்தி, தமிழ்நாட்டை சமூகநீதியும் வளர்ச்சியும் இணைந்து விளங்கும் மாநிலமாக மாற்றினார்.

மகளிர்க்கான விடியல் பேருந்து பயணத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, பள்ளிக்குழந்தைகளின் பசியாற்றும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மாணவ, மாணவிகள் நலனுக்காக தமிழ்ப் புதல்வன், புதுமைப்பெண், நான் முதல்வன், தோழி விடுதிகள் மற்றும் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், “முதலீட்டாளர்களின் முதல் முகவரி, உங்களுடன் ஸ்டாலின், நலன் காக்கும் ஸ்டாலின், தாயுமானவர் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன.

**அனைத்துத் தரப்பினரின்**
**பாராட்டைப் பெற்ற**
**முதல்வராக மு.க.ஸ்டாலின்!**

திராவிட மாடல் அரசின் பல திட்டங்களை பிற மாநிலங்களும் பின்பற்றின. காலை உணவு திட்டத்தை கனடா போன்ற நாடுகளும் பின்பற்றி அமல்படுத்தின. மிகச் சிறந்த முதலமைச்சர், மிகச் சிறந்த நிர்வாகத் திறன் படைத்தவர் மு.க.ஸ்டாலின் என ஐக்கிய நாடுகள் சபையும், இந்திய ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்புகளும், சான்றோர்களும் பாராட்டும் வகையில் திட்டங்களை தீட்டினார் மு.க.ஸ்டாலின்.

இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சராக செயல்பட்டவர் மு.க. ஸ்டாலின் என்று கரப்பான் பூச்சி ஜனதா கட்சி தலைவர் அபிஜித் தீப்கே புகழாரம் சூட்டியுள்ளார்.

2026 சட்டமன்றத் தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றிய திட்டங்களை யாராலும் மாற்றிவிட முடியாது என நிரூபித்துக்கொண்டிருக்கிறார்.. கடந்த முறை வெற்றி பெற்ற பிறகு வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்து நல்லாட்சி கொடுத்தது திராவிட மாடல் அரசு...

இப்போது தி.மு.க.வுக்கு வாக்களிக்காத மக்களுக்கும் சேர்த்துதான் போராடுகிறார் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின்.. மகளிர் உரிமைத் தொகை, காலை உணவு விடியல் பயணம் போன்ற திட்டங்கள் இருக்கும் வரை தமிழ்நாட்டை ஆள்வது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தான்...

> **“2026 சட்டமன்றத் தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றிய திட்டங்களை யாராலும் மாற்றிவிட முடியாது என நிரூபித்துக் கொண்டிருக்கிறார்.. கடந்த முறை வெற்றி பெற்ற பிறகு வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்து நல்லாட்சி கொடுத்தது திராவிட மாடல் அரசு... இப்போது தி.மு.க.வுக்கு வாக்களிக்காத மக்களுக்கும் சேர்த்துதான் போராடுகிறார் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின்..”**

**கழகத் தலைவர் உறுதி!**

தொண்டர்களின் துணையோடு மீண்டும் தி.மு.க.வை வெற்றிக்கு அழைத்துச் செல்வேன்! என தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில்,

2018ஆம் ஆண்டு இதே நாளில், தி.மு.க. தலைவராக உடன்பிறப்புகளால் தேர்ந்தெடுக்கப்பட்டதை நினைவுகூர்ந்துள்ளார்.

தி.மு.க. தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, “நாம் யார்? நம் கொள்கை கள் என்ன? நமக்குள் இருக்கும் குறைகள் என்ன? காலத்திற்கேற்ப நாம் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் எவை?

காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளாத விலங்கோ, இனமோ இந்த மண்ணில் நீடித்திருப்பதில்லை. மாற்றங்கள் நம்மில் இருந்து தொடங்கட்டும்” எனப் பேசியிருந்தேன் என்றும் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தி.மு.க. தலைவராக 9ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நாளில், அப்படி ஒரு மாற்றத்தை, மறுசீரமைப்பை அறிவித்துள்ளேன் என்றும் கழகத்தின் நலனை முன்னிறுத்திச் செய்யப்பட்டிருக்கும் இந்த மறுசீரமைப்புக்கு தி.மு.க.வினர் அனைவரும் துணைநிற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

உங்களின் துணையோடு மீண்டும் நம் கழகத்தை வெற்றிக்கு அழைத்துச் செல்வேன்! என்றும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

## கழகத் தலைவருக்கு உறுதுணையாக நிற்போம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

சென்னை, ஆக.30-

தி.மு.கழகத்தின் தலைவராக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நாளையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டின் உரிமைகளைக் காக்கும் பேரியக்கமாம் தி.மு.கழகத்தின் தலைவராக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நாள் இன்று!**

**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், உறுதியான கொள்கைப் பிடிப்புடன், தொண்டர்களைத் தொய்வின்றி வழிநடத்தி அமைப்பின் பலத்தை வலுப்படுத்தும், கழகத் தலைவருக்கு உறுதுணையாக நிற்போம்!**

**இந்த இயக்கத்தை அழிக்க நினைக்கும் வஞ்சகர்களை, வீழ்த்த கழகத் தலைவர் தலைமையில் அணிதிரள்வோம்!**

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.